DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 134/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஜெயசந்திரன் |
| Father / Husband Name | கிருஷ்ணன் |
| Village | 63 வேலாமூர் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 42 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **11.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேலாமூரில் வசித்து கிராம உதவியாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 30.01.2025 ம் தேதி காலை 10.30 மணிக்கு நான் வேலாமூர் கிராமத்தில் இருந்தபோது போலிசார் ஆவின் பால் உற்பத்தி மையத்தில் நடந்த சண்டை சம்மந்தமாக போலிசார் வரைபடம் வரைந்ததற்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. போலிசார் சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 10.30 மணிக்கு வந்து விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. புகார் கொடுத்த பரத்பூஷன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாள் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி தாளில் போலிசார் தட்டச்சு செய்து கொண்டு வந்த பின்னர் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் என்னை விசாரித்து பின்னர் தட்டச்சு செய்து கொண்டு வந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி தாளில் உள்ள குற்ற எண் என்னால் சொல்ல முடியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் போலிசார் கேட்டுக்கொண்டதால் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் போலிசார் எப்போது கையொப்பம் வாங்கினார்கள் என்றால் 30.01.2025 அன்று வாங்கினார்கள். நான் இந்த வழக்கின் சாட்சியம் அளிப்பதற்காக எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று வந்துள்ளேனா என்றால் தகவல் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன். புகார்தாரர் எனது உறவினர் என்பதாலும் எதிரி மீது கொடுத்துள்ள பொய் புகாரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Jayachan-

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

11/11/25

Judicial Magistrate No.II
Madurantakam